2014 ஆகஸ்ட் 6]

திகழக்கூடிய காரணத்தினாலும், காரைக்குடியில் ஒரு மகளிர் விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலிலே சொல்லியிருக்கின்றேன். அந்தப் பகுதியிலே கல்லூரியில் படிப்பவர்கள் மற்றும் பணிபுரியக்கூடிய மகளிர் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த விடுதி பணிபுரியக்கூடிய பெண்களுக்கான மகளிர் விடுதியாகும். ஆகவே, அங்கே பணிபுரியக்கூடிய மகளிருக்கு இதுபோன்ற விடுதியின் தேவை அதிகமாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்டறிந்து, கோரிக்கையினைப் பெற்றுத் தெரிவிப்பாரேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 349, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

349—

புதிய நியாய விலைக் கடை

***8786—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், எர்ணாபுரம் சந்தைப்பேட்டை பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 ஆகஸ்ட் 6

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், மகுடஞ்சாவடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் எர்ணாபுரம்-1 நியாய விலைக் கடையானது சந்தைப்பேட்டைப் பகுதியிலுள்ள 94 குடும்ப அட்டைகளையும் சேர்த்து மொத்தம் 1,222 குடும்ப அட்டைகளுடன் ஆசிரியர் காலனியில் செயல்பட்டு வருகின்றது. புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் சந்தைப்பேட்டை பகுதிக்கும், தாய் கடைக்குமிடையே 1 கி.மீ. தூரமே உள்ளது. உத்தேச பகுதி நேர நியாய விலைக் கடைக்குக் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், தாய்க் கடையிலிருந்து இடைப்பட்ட தூரம் 1½ கி.மீட்டரும் இருக்க வேண்டும் என்ற அரசின் நிபந்தனை பூர்த்தியாகவில்லை. இருந்தாலும்கூட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், தாய்க் கடையில் 1,222 குடும்ப அட்டைகள் உள்ளதைக் கருத்தில் கொண்டும், பொதுமக்களின் நலன் கருதியும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எர்ணாபுரம் ஊராட்சியில் பொதுமக்கள் சிரமமின்றி அத்தியாவசியப் பொருட்களைப் பெறுகின்றவகையில் ஒரு மையப் பகுதியைத் தேர்ந்தெடுத்து, இடத்தைத் தேர்வு செய்யும்பட்சத்தில் அங்கு புதிய முழு நேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சந்தைப்பேட்டை பகுதியில் ஆயிரத்திற்கும் மேலான குடும்ப அட்டைகள் இருப்பதனால், எர்ணாபுரம் பகுதியில் ஒரு தாய்க் கடை ஆரம்பித்துக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்குத் தேவையான இடத்தைத் தேர்வு*

LEGISLATURE ... ALONE TRIUMPH

2014 ஆகஸ்ட் 6]

செய்து கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்கள். அதனால், அந்தப் பகுதியில் தாய்க் கடை ஆரம்பிப்பதற்குத் தேவையான இடத்தை, சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, நிச்சயமாகத் தேர்வு செய்து கொடுக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தாய்க் கடை அமைத்துக் கொடுப்பதாக உறுதியளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என் தொகுதிவாழ் மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சி, செக்குமேடு, செங்குட்டப்பட்டி, குட்டக்காடு, மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளில் 300-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளன. அந்தப் பகுதிகளில் உள்ளவர்கள் 2 கி.மீ. தூரம் நடந்து சென்று கொண்டகாரனூர் ரேஷன் கடையிலிருந்து அத்தியாவசியப் பொருட்களை வாங்கக் கூடிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கனிவுடன் பரிசீலித்து அந்தப் பகுதியில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமானால், பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் கடைக்கும், தாய் கடைக்கும் 1½ கி.மீ. தூரம் இடைவெளி இருக்க வேண்டும். அந்தக் கடையில் 150 குடும்ப அட்டைகளைப் பிரித்த பிறகு தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று அரசின் நிபந்தனைகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல், பகுதி நேர நியாய விலைக் கடைகளைத் திறக்கின்றபோது, தாய்க் கடையும் 3*

நாட்கள்தான் திறக்கப்படும். பகுதி நேர கடையும் 3 நாட்கள்தான் திறக்கப்படும். எனவே, அத்தியாவசியப் பொருட்களை வாங்க வருகின்ற மக்களுக்குச் சிரமம் ஏற்படும். இதுபோன்ற கால சூழ்நிலைகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் பல மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல புதிய பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ 423 முழு நேர நியாய விலைக் கடைகளும், 861 பகுதி நேர நியாய விலைக் கடைகளும் திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில்கூட 6 புதிய பகுதி நேர/முழு நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் அரசு விதிகளுக்குட்பட்டு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் நிதியினையும் கருத்தில்கொண்டு, அந்தக் கடையைத் திறப்பதற்கு துறை ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடும் கடை விதிகளின்படி தாய்க் கடையிலிருந்து இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் இருக்கின்றது. அந்தக் கடையில் 800 ரேஷன் கார்டுகளுக்குமேல் இருக்கின்றன. தாய்க் கடையிலிருந்து கார்டுகளைத் தனியாகப் பிரித்துக் கொடுத்த பிறகும், அந்தத் தாய்க் கடையில் சுமார் 500 ரேஷன் கார்டுகளுக்குமேல் இருப்பதனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கருணையோடு பரிசீலித்து, அந்தப் பகுதியில் பகுதி நேர நியாய விலைக் கடையை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதனைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 350, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

350—

WORKING HOURS

***14982—DR. (TMT.) NANCY ANN CYNTHIA FRANCIS:**

Will the Hon. the Minister for Food be pleased to state:—

Whether the Government will take steps to extend the working time of Fair Price Shops upto 6-00 p.m.?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சென்னையைப் பொறுத்தவரை முற்பகல் 8-30 மணி முதல் பிற்பகல் 12-30 மணி வரையிலும், பிற்பகல் 3-00 மணி முதல் 7-00 மணி வரையிலும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இதர மாவட்டங்களைப் பொறுத்தவரை முற்பகல் 9-00 மணி முதல் பிற்பகல் 1-00 மணி வரையிலும், பிற்பகல் 2-00 மணி முதல் மாலை 6-00 மணி வரையிலும் நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டங்களில் நியாய விலைக் கடைகள் மாலை 6-00 மணி வரை செயல்பட்டு வருவதால், நியாய விலைக் கடைகளின் பணி நேரத்தை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட வேலை நேரப்படி அங்காடிகளைத் திறந்து வைத்து பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றனவா என்பதனையும், வேலை நேரங்களில்